# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 18/2023

## CNR.No.TNCB19000

Date:05.11.2024 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தங்கராஜ் | **வயது** | 40 |
| த/பெ | கரியப்பன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ரங்கம்பாளையம் ,சின்னகள்ளிப்பட்டி அஞ்சல் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 05th November 2024.

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தாயார் பெயர் கெம்பம்மாள். என் தாயாருடன் பிறந்தவர்கள் யார் என்றால் ராஜம்மாள் மற்றும் ரங்கசாமி. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய தாயார் பெயர் கெம்பியம்மாள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். கெம்பம்மாளும் கெம்பியம்மாளும் ஒரே நபர் என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல கொடுத்திருக்கிறேன். எந்த ஆவணம் கொடுத்திருக்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ஒன்னியம்மாளின் மகள் கெம்பம்மாள் என்றுதான் கொடுக்கப்பட்டுள்ளது கெம்பியம்மாள் என்று எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் பிராதில் சொல்லியிருக்கிறேன். எந்த ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்று சரியாக தெரியவில்லை. கெம்பியம்மாளுக்கும் இந்த சொத்திற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லாததால்தான் அதற்குண்டான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த பிறகுதான் வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதை என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

7, 8 மற்றும் 9 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். என்ன உறவுமுறை என்றால் ராமசாமி என்பவர் மாமா, ரங்கசாமி மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் மாமாவின் மகன்கள். நாங்கள் அனைவரும் ஒரே பகுதியில் இருக்கிறோம் என்றால் சரிதான். அவர்களின் வீடு 10 அடி வித்தியாசத்தில் உள்ளது என்றால் அதிகமாக இருக்கும். அந்த பகுதியில் மொத்தம் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் 4, 5 வீடுகள் ஒரே பகுதியில் உள்ளது.

நல்லது கெட்டது விசேஷங்களில் அனைவரும் கலந்து கொள்வோம். எந்த வருடம் வரை அவ்வாறு ஒன்றாக இருந்தோம் என்றால் 2022 வரை இருந்தோம். ரங்கசாமி இருக்கும் வரை எங்கள் குடும்பத்தில் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் இருந்தோம் என்றால் சரியல்ல. சிறு சிறு சண்டைகள் வரும். என்ன காரணங்களுக்காக சண்டை வந்தது என்றால் சீர் செய்யவில்லை என்பது போன்று சண்டை வந்தது.

ஒன்னியம்மாளும் கஜ்ஜப்ப கவுடரும் உயிருடன் இருக்கும் வரை ரங்கசாமி என்பவருடன் இருந்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. அவர்களுடைய சொத்துக்களை ஒன்னியம்மாளும் கஜ்ஜப்ப கவுடரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்கள் இறந்த பிறகு விவசாயம் நாங்கள்தான் செய்து வந்தோம். அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் ரங்கசாமிதான் அனுபவித்து வந்தார் என்றும் அவர்கள் உயிருடன் இருக்கும்போதே வாய்மொழியாக ஒன்னியம்மாள் ரங்கசாமிக்கு பிரித்து கொடுத்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அவ்வாறு ரங்கசாமிக்கு 1997 ல் பிரித்து கொடுத்த பிறகு ராமசாமிக்கு விற்று விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு 2022 ம் ஆண்டு நவம்பர் மாதம்தான் தெரிய வந்தது. ரங்கசாமிக்கு வாய்மொழியாக ஒன்னியம்மாள் பிரித்து கொடுத்த விபரம் தெரிந்துதான் அவர் ராமசாமிக்கு விற்பனை செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரங்சாமி இருக்கும்வரை தாவா சொத்துக்களை பொருத்து பாகப்பிரிவினை கேட்கவில்லை என்றால் கேட்டோம். அவர் பிரித்து தரவில்லை.

எதாவது சட்டப்படியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் தற்போதுதான் தெரிந்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்துக்களை பொறுத்து 1997

க்கு பிறகு எனது பெயரில் வருவாய் ஆவணங்கள் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்போது எனக்கு 16, 17 வயது இருக்கும். ராமசாமி கிரையம் பெற்று 25 வருடங்களுக்கு பிறகு அவரது மகன்களான 8, 9 ம் பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டார் என்றால் தற்போதுதான் தெரிய வந்தது. 25 வருடங்களாக ராமசாமி பெயரில் இருந்து வந்துஅதற்கு பிறகு தற்போது 8, 9 பிரதிவாதிகள் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டு 8, 9 பிரதிவாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். அதனால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன்.

தனிச்சுவாதீனத்தில் இருந்து தனிப்பட்டா வாங்கி இருந்துவருவதால் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாமல் தாவா சொத்தை அபகரிக்க வேண்டி தெரிந்தே மேற்படி தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.